செய்தி வெளியீட்டு எண்: 30/2023 நாள்: 03.04.2023

**தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்**

**எண்.3, தேர்வாணையச் சாலை, சென்னை – 600 003.**

**செய்தி வெளியீடு**

தமிழ்நாடு மருத்துவ சார்நிலைப் பணிகளில் அடங்கிய தொழில் ஆலோசகர் (மருத்துவக் கல்வித் துறை) மற்றும் தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரிய சமூக மேம்பாட்டு பணியில் அடங்கிய சமூக அலுவலர் (தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம்) பதவிக்கு நேரடி நியமனம் செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் 28.07.2022 நாளிட்ட அறிவிக்கை எண் 17/2022-ன் வாயிலாக விண்ணப்பங்களைக் கோரியிருந்தது. மேற்கண்ட பதவிகளுக்கான எழுத்துத்தேர்வு கடந்த 12.11.2022 மு.ப மற்றும் பி.ப. / 13.11.2022 பி.ப. ஆகிய நாட்களில் நடைபெற்று, எழுத்துத்தேர்வில் விண்ணப்பதாரர்கள் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் தரவரிசை விவரங்கள் 15.02.2023 அன்று தேர்வாணைய இணையதளத்தில் வெளியிடப்பட்டன.

2) தொழில் ஆலோசகர் மற்றும் சமூக அலுவலர் பதவிகளுக்கான காலிப்பணியிடங்கள் முறையே 5 மற்றும் 11 -ஐ நிரப்புவதற்கு மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்விற்கு 1:3 என்ற விகிதாசாரத்தில் விண்ணப்பதாரர்கள் அழைக்கப்பட்டனர். மூலச்சான்றிதழ்கள் சரிபார்ப்பு மற்றும் கலந்தாய்வு 30.03.2023 அன்று தேர்வாணைய அலுவலகத்தில் நடைபெற்றது.

3) இந்த கலந்தாய்வில், தொழில் ஆலோசகர் மற்றும் சமூக அலுவலர் பதவிகளுக்கான மொத்த காலிப்பணியிடங்கள் முறையே 5 மற்றும் 11 ஆகியன நிரப்பப்பட்டுள்ளன. மேலும், நிரப்பப்பட்ட மேற்கண்ட காலிப்பணியிடங்களுக்கான வகுப்பினவாரியான விவரம் தேர்வாணைய இணையதளமான (www.tnpsc.gov.in)–ல் வெளியிடப்பட்டுள்ளது.

திருமதி. பி.உமா மகேஸ்வரி, இ.ஆ.ப.,

செயலாளர்